# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII, Cr.P.C.)

*IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI*

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 321/2019 |
| Deposition of Witness | : | PW-6 |
| Name | : | தங்கவேல் |
| Father Name | : | காளியப்பகவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 56 |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.05.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்றப்பிரிவில் காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 22.07.2016 ம் தேதி ஊத்துக்குளி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பகல் 12.30 மணிக்கு அ.சா.1 சகுந்தலா என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரைப் பெற்று 11 ம் பட்டியல் சாட்சி காவலர் வினோத்குமார் நிலைய குற்ற எண் 346/2016 சட்டப்பிரிவு 279, 304(ஏ) இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி வழக்கை புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார்.

2. நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் பகல் 01.15 மணியளவில் சம்பவ இடத்தை 6 ம் பட்டியல் சாட்சி காளிதாஸ் மற்றும் அ.சா.4 ஜெகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3. அ.சா.1 சகுந்தலாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினமே திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை இறந்துபோன தங்கவேல் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி காவலர் வினோத்குமார் வசம் ஒப்படைத்தேன்.

4. 1 முதல் 8 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இரவு 07.00 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரி பூவேந்திரனை என்பவரை கைதுசெய்து தக்க பிணையில் விடுவித்தேன். விபத்தில் சம்பந்தப்பட்ட எதிரி ஓட்டி வந்த TN 39 BM 7443 என்ற பதிவு எண் கொண்ட Ashok leyland வாகனத்தை 25.07.2016ம் தேதி மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன்.

5. பின்னர் கடந்த 07.08.2016ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் 9ம் பட்டியல் சாட்சி கனகராஜ் என்பவரை விசாரித்து ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 39 BM 7443 என்ற பதிவு எண் கொண்ட Ashok leyland வாகனத்தின் ஆய்வறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் இறந்துபோன தங்கவேல் என்பவரின் பிரேத்தை கூராய்வு செய்த மருத்துவர் 10ம் பட்டியல் சாட்சி விமல்குமார் என்பவரை விசாரித்து பிணகூராய்வு அறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த பிண கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது 279, 304(ஏ) இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில்  காணொளி வாயிலாக சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. காணொளி வாயிலாக விசாரிக்கப்பட்டதால் சாட்சியிடம் கையொப்பம் பெறப்படவில்லை.

B
DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.05.24 16:13:18 +0530

மாவட்ட உரிமையியல்  மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.